# வடக்கு மாகாணக் கல்வித்திணைகளம்
## தரம் - 05
## பயிற்சி வினாத்தாள் - 02

தயாரிப்பு :- திரு. க. சந்திரகுமார் (ஆசிரிய ஆலோசகர் )
வழிப்படுத்தல் :- திரு. இ. ரவிச்செல்வன் (உதவிக்கல்விப் பணிப்பாளர்)
கல்வி வலயம் :- வவுனியா வடக்கு கல்வி வலயம்.

2024

2

1 மணித்தியாலம்

சுட்டெண் :.......................................................

## பகுதி -I

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:-**

- ☞ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ☞ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ☞ இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ☞ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| **இலக்கத்தில்** | |
| **சொற்களில்** | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |

_ _ _ _ _ _ _ _ _ _ _ வகுப்பாசிரியர்

_ _ _ _ _ _ _ _ _ _ _ அதிபர் ஒப்பம்

_ _ _ _ _ _ _ _ _ _ _ வலய மேற்பார்வையாளர்

* தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தரப்பட்ட மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

**1. தரப்பட்டுள்ள காட்சிப் படத்திற்குப் பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவு செய்க.**



(1) சிறுவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய இடங்களில் இதுவும் ஒன்றாகும்.

(2) சிறுவர்கள் தமது உடற்றிறன்களை வளர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான ஒரு இடமாகும்.

(3) சிறுவர்களது கற்றற் செயற்பாடுகளுக்கு இவ்விடம் ஒரு தடையாக உள்ளது.

**2. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?**



(1) சப்பாத்தும் தொப்பியும் (2) பையும் மணிக்கூடும் (3) பென்சிலும் பையும்


**3. பின்வரும் உருக்களில் காட்டப்படுபவற்றில் அவற்றுக்கிடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கத்தக்க முறை யாது?**



(A) (B) (C) (D)

(1) A, B உம் C, D உம் (2) A, C உம் B, D உம் (3) A, D உம் B, C உம்

**4. A,B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?**



(1) இரண்டு

(2) மூன்று

(3) நான்கு

**5. அருகருகே அமைந்துள்ள 5 முழு எண்களின் கூட்டுத்தொகை 55 எனின், அந்த 5 எண்களுள் மிகச்சிறிய எண் யாது?**


(1) 9 (2) 8 (3) 10

5. பெட்டியொன்றிலிருந்த பச்சை நிறப் பந்துகளினதும், மஞ்சள் நிறப்பந்துகளினதும் எண்ணிக்கை 60 எனின் உருவிலுள்ள தகவல்களுக்கேற்ப பச்சைநிறப் பந்துகளினதும், மஞ்சள் நிறப் பந்துகளினதும் எண்ணிக்கை முறையே ?

(1) 30 , 45

(2) 15 , 30

(3) 45, 15




6. வரிசையொன்றில் நிற்கும் 30 பிள்ளைகள் நிற்கும் நிலைக்கேற்ப 1,2,3,4... என்றவாறான எண் அட்டைகளை ஏந்தியுள்ளனர் 11-30 வரையிலான பிள்ளைகள் ஏந்தியுள்ள எண் அட்டைகளின் எண்களின் கூட்டுத்தொகை யாது?


(1) 465 (2) 410 (3) 110

7. உருவின் தகவல்களுக்கு ஏற்ப எறும்பானது A என்ற இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து மீண்டும் A என்ற இடம் வரை பயணிக்க வேண்டிய தூரம் யாது?

(1) 40 cm

(2) 38 cm

(3) 42 cm




8. ஒரே வடிவமுடைய 12 பொதிகளில் ஒரு பொதி மட்டும் சற்று நிறையில் கூடியது. அந்த நிறையில் கூடிய பொதியை இனங்காண்பதற்கு தராசு ஒன்றைப் பயன்படுத்தி அளக்கத்தக்க ஆகக் குறைந்த சந்தர்ப்பங்கள் எத்தனை?

(1) 3 (2) 4 (3) 5

9. பஸ்வண்டியானது வீதியில் சமமான இடைத்தூரங்களில் அமைந்துள்ள 3 மின்கம்பங்களைக் கடந்து செல்வதற்கு 2 நிமிடங்கள் எடுத்தது எனின் 12 மின் கம்பங்களைக் கடந்து செல்வதற்கு எடுக்கும் நேரம் யாது?

(1) 10 நிமிடங்கள் (2) 11 நிமிடங்கள் (3) 12 நிமிடங்கள்

10. வடை வியாபாரி ஒருவர் உழுந்து வடை ஒன்று ரூபாய் 30.00 ஆகவும் பருப்பு வடை ஒன்று ரூபாய் 20.00 ஆகவும் மொத்தம் 12 வடைகளை விற்பனை செய்ததன் மூலம் ரூபாய் 310.00 ஐப் பெற்றுக்கொண்டார் எனின் அவர் விற்பனை செய்த பருப்பு வடைகளின் எண்ணிக்கை?

(1) 7 (2) 5 (3) 8

11. தந்தையினதும் மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 3 வருடங்களுக்கு முன்பு 48 ஆகும் இப்பொழுது மகனின் வயது 19 எனின் தந்தையின் வயது யாது?

(1) 32 (2) 35 (3) 38


12. டிசிதா தரம் ஒன்றில் இருந்து தரம் 5 வரை ஒழுங்காக வகுப்பேற்றம் செய்யப்பட்டாள். அவள் 2024 ஆம் ஆண்டில் தரம் 5 இல் கல்வி கற்கின்றாள் எனின் அவள் பிறந்த நூற்றாண்டு, தசாப்தம் என்பன முறையே.

(1) 21 ஆம் நூற்றாண்டு 1 ஆம் தசாப்தம்

(2) 21 ஆம் நூற்றாண்டு 2 ஆம் தசாப்தம்

(3) 20 ஆம் நூற்றாண்டு 1 ஆம் தசாப்தம்

* கீழே உள்ள சதுரமுகிக்கு படத்தில் காட்டியது போன்று எல்லா உச்சிகளிலும் உள்ள பகுதிகளுக்கு நிறந்தீட்டிய பின்னர் கோடுகள் வழியே வெட்டி சிறிய சதுரமுகிக் குற்றிகள் பெறப்பட்டது எனக் கொண்டு 13 ஆம், 14ஆம் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.



13. ஒரு பக்கமும் நிறம் பூசப்படாத குற்றிகள் எத்தனை?

(1) 19 (2) 01 (2) 24

14. இரண்டு பக்கங்கள் மாத்திரம் நிறந்தீட்டப்பட்ட குற்றிகள் எத்தனை?

(1) 12 (2) 08 (3) எதுவும் இல்லை

15. பெட்டியொன்றில் 28 பென்சில்கள் உள்ளன. நீலப் பென்சில்களைப் போல் 2 மடங்கு சிவப்பு நிறபென்சில்களும், சிவப்பு நிற பென்சில்களைப் போல் 2 மடங்கு பச்சை நிறப் பென்சில்களும் இருந்தால் பெட்டியில் இருந்த பச்சை நிறப் பென்சில்கள் எத்தனை?

(1) 28 (2) 16 (3) 8

* கீழ் வரும் விபரணத்திற்கமைய 16ஆம் , 17 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க? வவுனியாவிற்கும் முல்லைத்தீவிற்கும் இடையிலான தூரம் 72 கிலோமீற்றர் ஆகும். தனியார் பஸ் வண்டி ஒன்று இந்த 72 கிலோமீற்றர் பயணத்தை இரண்டு மணித்தியாலங்களில் பூர்த்தி செய்கின்றது. ஒவ்வொரு அரை மணித்தியாலமும் வவுனியாவில் இருந்து முல்லைத்தீவிற்கும், முல்லைத்தீவில் இருந்து வவுனியாவிற்கும் தனியார் பஸ் வண்டிகள் புறப்படுவதுண்டு.நேர அட்டவணையில் மாற்றமின்றி உரிய வேளையில் அவை தொடரொழுங்கில் பயணிக்கும்.

16. வவுனியாவில் ஒரு பஸ் வண்டி காலை 5 மணிக்குப் புறப்படுகிறது. பஸ் வண்டியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பயணம் 40 நிமிடங்கள் தாமதமாகியது. இவ் பஸ் வண்டியானது தனது பயணத்தைப் பூர்த்தி செய்வதற்கு எடுத்த நேரத்தில் வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு செல்வதற்கான எத்தனை பஸ் வண்டிகள் புறப்பட்டிருக்கும்?

(1) 08 (2) 07 (3) 05

17. முல்லைத்தீவில் இருந்து காலை 8.30 மணிக்கு வவுனியா நோக்கிப் புறப்படும் பஸ் வண்டி ஒன்றை வவுனியாவில் இருந்து புறப்படும் எத்தனை பஸ் வண்டிகள் வழியில் சந்திக்கும்?

(1) 03 (2) 05 (3) 07

18. ஒரு கூடையிலுள்ள குறித்த எண்ணிக்கையான அப்பிள்களை பொதி செய்யும் போது மும்மூன்றாக அல்லது ஐந்தைந்தாக மீதமின்றிப் பொதி செய்யக் கூடியதாகவிருந்தது. அவற்றை ஒரு பொதியில் நான்கு அப்பிள்கள் வீதம் பொதி செய்த போது ஓர் அப்பிள் மீதமாகவிருந்தது எனின் ஆரம்பத்தில் கூடையிலிருந்த அப்பிள்கள் எத்தனை?


(1) 45 (2) 57 (3) 61

**19. உரு-I இல் நிழற்றியுள்ள கட்டங்கள் மாத்திரம் மறையக்கூடியவாறு உரு- II இனை ஒட்டினால் கிடைக்கும் சதுர வலைக் கட்டத்தில் உள்ள கட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?**

(1) 16

(2) 25


(3) 36





**20. ஒரு வரிசையில் 42 பேர் உள்ளனர். முரளி வரிசையில் 24 ஆவதாக நின்றான். அவன் வரிசையின் நடுவே நிற்கவேண்டுமாயின் வரிசையில் இன்னும் எத்தனை பேரைச் சேர்க்க வேண்டும்?**

(1) 4 பேர் (2) 5 பேர் (3) 6 பேர்

**21. பின்வரும் உருவில் வெறுமையாக உள்ள பகுதியை நிரப்புவதற்குப் பொருத்தமான பகுதிகளைக் கொண்ட விடை எது?**






**22. இங்கு தரப்பட்டுள்ள விபரணத்தைக் கொண்டு வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க?**

**அன்பும் அறனும் மனித வாழ்வில் இன்றியமையாதவை**
**அதுவே எம் மகிழ்சியின் அத்திவாரம்**
**துன்பம் நீங்கத் துணிச்சல் தந்து**
**அன்றே விலக அதுவே காரணம்**


**இதன் படி துன்பங்கள் எம்மில் இருந்து நீங்குவதற்குத் துணையாக இருப்பது எது?**

(1) வாழ்க்கை (2) மகிழ்ச்சி (3) அன்பும் அறனும்

**21. 2024 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் 5 திங்கட்கிழமைகள் உள்ளன. அவற்றில் மூன்று திங்கட்கிழமைகளின் திகதிகள் ஒற்றை எண்களாகும். அம் மாதத்தின் 12 ம் திகதி என்ன கிழமையாகும்?**

(1) புதன் (2) வெள்ளி (3) ஞாயிறு

**23. இவ்வுருவில் ஆறு பக்கங்களும் அ , ஆ , இ , ஈ , உ , ஊ எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன.**




**இதன்படி ஈ எனக் குறிப்பிடப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கமாக இருக்கக் கூடியது?**

(1) **அ** (2) **ஆ** (3) **ஊ**

**24. கூடையொன்றில் மஞ்சள் நிறப் பூக்களைப் போல் இரண்டு மடங்கு சிவப்பு நிறப் பூக்கள் உள்ளன. சிவப்புநிறப் பூக்களைப் போல் இரண்டு மடங்கு வெள்ளை நிறப் பூக்கள் உள்ளன. நீல நிறப் பூக்களைப் போல் இரண்டு மடங்கு சிவப்பு நிறப் பூக்கள் உள்ளன. அதன்படி கூடையில் ஒரேயளவான எண்ணிக்கை வீதம் உள்ள இரண்டு பூ வகைகளும் எவை?**

(1) நீலநிறப் பூக்கள், வெள்ளைநிறப் பூக்கள்
(2) மஞ்சள் நிறப் பூக்கள், நீல நிறப் பூக்கள்
(3) மஞ்சள் நிறப் பூக்கள் வெள்ளைநிறப் பூக்கள்


**25. இலண்டனிற்கு கிழக்கே கொழும்பும், இலண்டனுக்கு மேற்கே கியூபாவும் உள்ளன. இலண்டனில் நேரம் நண்பகல் 12.00 மணியாக இருக்கும் போது**

(1) கொழும்பில் நேரம் பிற்பகலாக இருக்கும்
(2) கியூபாவில் நேரம் பிற்பகலாக இருக்கும்
(3) கொழும்பில் நேரம் முற்பகலாக இருக்கும்

**26. அண்ணாவினதும் தம்பியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 28 வருடங்கள் ஆகும். அண்ணா தம்பியை விட ஆறு வருடங்கள் மூத்தவன் எனின் தம்பியின் வயது யாது?**


(1) 15 (2) 14 (3) 11

**27. மின்குமிழ்கோர்வையொன்றின் தொடரொழுங்கு அருகேயுள்ளவாறு காட்டப்பட்டுள்ளது. இத்தொடரொழுங்கில் 18 மின்குமிழ்கள் காணப்படுகின்றன எனின் அங்குள்ள பச்சை மின்குமிழ்கள் எத்தனை?**





(1) 7 (2) 8 (3) 9

**28. கீழேயுள்ள படங்கள் சம்பவமொன்றை விபரிக்கின்றது. இது தொடரொழுங்கில் அமையும் விதத்தை தெரிவு செய்க?**




(1) B C A D (2) B D C A (3) B A C D

**29. இவ்வுருவில் மிகக் கூடுதலாகக் காணக் கூடியது?**



(1) செவ்வகங்களாகும்
(2) சதுரங்களாகும்
(3) முக்கோணிகளாகும்


**30. 12 cm நீளமும் 8 cm அகலமும் 8 cm உயரமும் உடைய கண்ணாடித் துண்டிலிருந்து 2 cm நீளம், அகலம், உயரம் உடைய எத்தனை சிறிய சதுரமுகிக் கண்ணாடிக்குற்றிகளை வெட்டலாம்?**

(1) 96 (2) 24 (3) 48

**31.** கடிகார முகப்பு ஒன்றில் 12 மணித்தியாலங்களுக்குப் பதிலாக 8 மணித்தியபலங்களைக் காட்டும் வகையில் இலக்கங்கள் இடப்பட்டால் அக்கடிகாரத்தின் 1, 3 ஆகிய இலக்கங்களுக்கு நேரெதிரே இருக்கக் கூடிய இலக்கங்கள் முறையே எவை?

(1) 4, 7 (2) 5, 7 (3) 5, 8

* பாடசாலையொன்றின் மரதன் ஓட்டப் போட்டி நடைபெறும் பாதையின் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு அடுத்து வரும் இரண்டு வினாக்களுக்கும் விடை தருக?





**32.** மரதனோட்டப் போட்டியாளர்கள் அறியும் பொருட்டு பாதையின் இடது புறம் திரும்பும் இடங்களில் "இடது பக்கம் திரும்புக" என எழுதப்பட்ட அறிவுறுத்தற் பலகை வைக்கப்பட்டதாயின் அவ் வகையான எத்தனை அறிவுறுத்தற் பலகை வைக்கப்பட்டிருக்கும்?

(1) 6 (2) 5 (3) 7

**33.** இதன்படி போட்டியாளர்கள் கிழக்குத் திசையில் பயணித்த தடவைகள் எத்தனை?


(1) 6 (2) 5 (3) 7

**34.** கீழே காட்டப்பட்டுள்ளது சில பொருட்களினுடைய விலைகளின் கூட்டுத்தொகைகளாகும். கீழேயுள்ள விலைகளின்படி, புத்தகமொன்றினதும் பேனையொன்றினதும் விலை யாது?




(1) ரூபாய் 130.00 (2) ரூபாய் 110.00 (3) ரூபாய் 195.00

**35.** பிள்ளையொன்று உரு A யில் காட்டப்பட்டுள்ள முறையில் கார்ட்போர்ட் துண்டொன்றை புள்ளிக்கோடுகளின் வழியே அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ள திசைகளுக்கு மடித்து, உரு B யில் காட்டப்பட்டுள்ள முறையில் நடுவில் நான்கு துளைகளை இட்டது. அதன்படி, அவ் உருவை விரித்துப்பார்க்கும் போது தோன்றும் துளைகள் எத்தனை?





(1) 16

(2) 4

(3) 12


**36. மாணவன் ஒருவன் ஒரே அளவான ஐந்து சதுரங்களைக் கொண்டு செவ்வக வடிவம் ஒன்றை வரைந்தான். (அடுத்த உருவில் காட்டப்பட்டுள்ளது போன்று) அவன் அச் செவ்வக வடிவத்தில் முதலாவது சதுரத்தை வரைவதற்கு 4 வினாடிகள் எடுத்தது எனின் முழு உருவையும் வரைவதற்கு எவ்வளவு நேரம் எடுத்திருக்கும்?**


(இது போன்ற சதுரத்தைக் கொண்டு)


(அமைக்கப்பட்ட செவ்வகம்)

(1) 20 வினாடிகள்  (2) 18 வினாடிகள்  (3) 16 வினாடிகள்

**37. இவ் உருவில் உள்ள சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?**



(1) 20

(2) 19

(3) 14

**38. ஒருவர் முதலாந் திகதியில் இருந்து 30 ஆந் திகதி வரை உண்டியலில் பணம் சேகரித்தார். அன்றைக்கு என்ன திகதியோ அத் தொகையை அவர் உண்டியலில் இடுவார் எனின் 30 திகதி அவ் உண்டியலில் சேர்ந்த பணம் எவ்வளவு?**

(1) ரூபாய் 465.00  (2) ரூபாய் 310.00  (3) ரூபாய் 1000.00

* **வட்டவடிவான மேசையொன்றில் மேசையை நோக்கியவாறு ஆறு மாணவர்கள் இருந்த விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

- சபிக்ஷனுக்கு எதிரே மபிசனும் இருந்தான்.
- மபிசனுக்கு இடது பக்கத்தில் இரண்டாவதாக தக்ஸலனும் இருந்தான்.
- மபிசனுக்கு வலது பக்கத்தில் அபிஸ்ணன் இருக்கின்றான்.
- நதீஸ்வர், அபிஸ்ணனுக்கு வலது பக்கத்தில் டெனிஸ்டனுக்கு எதிரேயும் இருந்தான்.

**39. தக்ஸலனுக்கு இடது பக்கத்தில் இருப்பவர் யார்?**

(1) டெனிஸ்டன்  (2) சபிக்ஷன்  (3) அபிஸ்ணன்

**40. சபிக்ஷனும் மபிசனும் நேரேதிரே இடம் மாறி இருப்பார்களாயின் தற்போது சபிக்ஷனுக்கு வலது பக்கத்தில் இருப்பவர் யார்?**

(1) டெனிஸ்டன்  (2) நதீஸ்வர்  (3) அபிஸ்ணன்

( 40 x 2.5 = 100 புள்ளிகள்)

LMDMUnit

# வடக்கு மாகாணக் கல்வித்திணைகளம்
## தரம் - 05
## பயிற்சி வினாத்தாள் - 02

தயாரிப்பு :- திரு. க. சந்திரகுமார் (ஆசிரிய ஆலோசகர் )
வழிப்படுத்தல் :- திரு. இ. ரவிச்செல்வன் (உதவிக்கல்விப் பணிப்பாளர்)
கல்வி வலயம் :- வவுனியா வடக்கு கல்வி வலயம்.

2024

**2**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.........................................................

# பகுதி -II

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:-**

- ☞ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ☞ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ☞ இவ்வினாத்தாளில் **60**வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ☞ மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான **விடையைத் தெரிவு செய்து** அதன் கீழ்க் கோடிடுக.
- ☞ விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களில் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |

_ _ _ _ _ _ _ _ _ _ வகுப்பாசிரியர்

_ _ _ _ _ _ _ _ _ _ அதிபர் ஒப்பம்

_ _ _ _ _ _ _ _ _ _ வலய மேற்பார்வையாளர்

(01) **கீழேயுள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**இங்கிலாந்தின் ஸ்டான்ஸ்டட் கோட்டையில் ஒரு வாத்து ஒன்பது குஞ்சுகளைப் பொரித்தது. வாத்தும் குஞ்சுகளும் இரை தேடி சுற்றித் திரிந்ததை அங்கிருந்த நாய் ஒன்று கவனித்து வந்தது. திடீரென்று தாய் வாத்து காணாமல் போய் விட்டது. நரி தூக்கிச் சென்றுவிட்டது. தாய் இன்றித் தவித்த வாத்துக் குஞ்சுகளை நாய் அரவணைத்துக் கொண்டது. நாய் செல்லும் இடமெல்லாம் குஞ்சுகளும் கூடவே சென்றன. நாயின் தலைமீது ஏறி நின்றன. நாயின் முதுகில் வரிசையாக அமர்ந்து கொண்டு வலம் வந்தன.**

1. *வாத்து எத்தனை குஞ்சுகளைப் பொரித்தது?*

.................................................................................................................................

2. *வாத்துக் குஞ்சுகளை அரவணைத்த பிராணி எது?*

.................................................................................................................................

3. *தாய் வாத்தை தூக்கிச் சென்ற பிராணி எது?*

.................................................................................................................................

4. *உணவு என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக?*

.................................................................................................................................

5. *இடம் + எல்லாம் என்ற சொல்லைச் சேர்த்து எழுதுக?*

.................................................................................................................................

6. *சென்றன என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?*

.................................................................................................................................

(02) **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1. “நண்பர்கள்” என்பது உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (..................)
2. “புத்தகம்” என்பது அஃறிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (..................)

(03) **அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களில் எழுதுக?**

1. ஒளியைப் பரப்புவது .................................................................. (விளக்கு, விலக்கு)
2. நீடூழி காலம் ........................................................................... (வாள்க, வாழ்க)
3. ஆழம் ................................................ காலை விடாதே. (அரியாமல், அறியாமல்)
4. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ................. ஆகும். (பனி, பணி)

(04) **கீறிட்ட இடங்களில் வரவேண்டிய பொருத்தமான எழுத்தை எழுதுக?**

1. மெ……….குவர்த்தியின் வெ………ச்சத்தினால் இருள் விலகியது.
2. வ……..சையில் நிற்குமாறு மாணவர்கள் அ……….வுறுத்தப்பட்டனர்.

(05) **கீழ்வரும் சொற்களுக்கான எதிர்ப்பாற் சொற்களை எழுதுக?**

1. பேரரசர் :……………………………. 2. பாக்கியவான் :………………………………

சுட்டெண் :..................................................

(06) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1. வீண் செலவு செய்பவன் : ...........................................................................

2. நம்பமுடியாத கதை : ...........................................................................

(07) கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

( நாம், பந்துகள், நான், மாணவர்கள் )

1. உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச் சொல் : ...........................................

2. உயர்திணை ஒருமை தன்மைப் பெயர்ச் சொல் : ...........................................

(08) கீழே தரப்பட்டுள்ள சுருக்கக் குறியீட்டிற்கான விரிவினை எழுதுக?

1. பி.ப..........................................................................................................

(09) கீழ்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் ஆக்குக?

பின்னாலும் / இருக்கும் / வெற்றியின் / எந்தவொரு / வலியும் வேதனையும் / நினைவிற் கொள் / என்பதை

.......................................................................................................

.......................................................................................................

(10) நெல் (உள்ளீடு) - அரிசி எனின் மாம்பழம் - ......................................

* சரியான விடையைத் தெரிவு செய்க.

(11) 1. வில்லியம் ஹோகிங் எழுதிய உலகப்புகழ் பெற்ற நூல் எது?

( ஆன்மீக வாதி / காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம் / பீர்பால் கதைகள்)

2. "காய்கள் கட்டிய வெருளி" எனும் பாடலை இயற்றியவர் யார்?

( கவிஞர் செல்ல கணபதி / பாயிஷா அலி / பண்டிதர் ச. சச்சுதானந்தன் )

(12) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.



...............................



...............................

(13) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

i. Silence Please : ...........................................................................

ii. May I Come in? : ...........................................................................

(14) பின்வரும் சொற்களின் சிங்கள உச்சரிப்பை எழுதுக.

i. புத்தகம் :........................................ ii. கிளி : ..........................................................

(15) பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

i. விஸ்ஸ : .................................... ii. சந்துதா : ...................................................

**கீழ்வரும் வினாக்களுக்கான விடைகளை எழுதுக?**

(16) 7099 என்ற இலக்கத்துடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் விடையை சொற்களில் எழுதுக.

……………………………………………………………………………………………

(17) கீழ்வரும் எண்களில் 9 இன் மடங்குகளை இறங்கு வரிசையில் எழுதுக.


| |
|---|
| 19, 27, 54, 82, 36, 46, 58, 99 |

……………………………………………………………………………………

(18) 1) 287 - 278 = கழித்து வரும் விடையை உரோமன் எண்ணில் எழுதுக. ……..……………..

2) 1895 ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டிற்குரியது? ………………………………….......

(19) கீழ்வரும் கணிதச் செய்கையை அவதானித்து எண் சட்டத்தில் வரவேண்டிய எண்ணை வரைக?




(20) தேங்காய் வியாபாரியொருவர் இருவரிடம் இருந்து முறையே 463, 396 ஆகிய எண்ணிக்கையான தேங்காய்களை வாங்கி அவற்றில் 654 தேங்காய்களை விற்பனை செய்தார் எனின் எஞ்சியுள்ள தேங்காய்கள் எத்தனை?

.........................................................................................................................


(21) மண்டபமொன்றில் உள்ள 92 கதிரைகளை ஒரு மேசைக்கு நான்கு வீதம் எத்தனை மேசைகளுக்கு வைக்கலாம்?

.........................................................................................................................

(22) 650 பேனாக்களை ஒருவருக்கு 6 வீதம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. மீதியாக உள்ள பேனாக்களுடன் எத்தனை பேனைகளைச் சேர்ப்பதன் மூலம் மேலும் ஒருவருக்கு 6 பேனைகளை வழங்க முடியும்?

……………………………………………………………

(23) ரூபா 45 பெறுமதியான 306 பயிற்சிக் கொப்பிகளை ஒருவருக்கு மூன்று வீதம் எத்தனை பேருக்குப் பங்கிட முடியும்? …………………………………………………………

(24) 

அருகே உருவில் இனங்காணக்கூடிய முக்கோணிகள் எத்தனை?


.................................................

(25) படத்திலுள்ள கடிகாரம் காட்டும் நேரம் யாது?





.............................................................................................

(26) உருவில $^{2}/_{10}$ பங்கை நிழற்றவேண்டுமாயின் எத்தனை சிறிய முக்கோணிகளுக்கு நிறந் தீட்ட வேண்டும்?



.............................................................................................

(27) தரப்பட்டுள்ள பென்சிலின் நீளம் யாது?




.....................................................................

(28) **A, B** ஆகிய இருவர் ஒரே வீட்டிலிருந்து வடக்கு நோக்கி 100**m** தூரம் பயணித்த பின்பு **A** இடது பக்கமாகவும், **B** வலது பக்கமாகவும் திரும்பி 200**m** பயணித்தனர். பின்னர் **A** மீண்டும் இடது பக்கமாகவும் **B** மீண்டும் வலது பக்கமாகவும் திரும்பி 100**m** சென்று பயணத்தை நிறைவு செய்தனர் எனில்


1. தற்போது **A** இற்கும் **B** இற்கும் இடையிலான கிட்டிய தூரம் யாது?

.............................................................................................

2. **A** இற்கு **B** எத்திசையில் உள்ளார்?

.............................................................................................

(29) **குழுவொன்றில் உள்ள பிள்ளைகள் விரும்பும் பானங்கள் தொடர்பான விபரம் வரைபிற் காட்டப்பட்டுள்ளது.**




**1. பழரசத்தை விரும்பும் மாணவர் எண்ணிக்கை 11 எனின் அதனை வரைபிற் குறித்துக் காட்டுக?**

**2. கோப்பியை விட தேநீரை அருந்தும் பிள்ளைகள் எத்தனை பேர் அதிகமாவர்?**

.........................................................................

சரியான விடையைத் தெரிவு செய்க?

30) நாவல் மரம் பூக்கும் மாதம் எது?

(1) வைகாசி (2) ஆனி (3) ஆடி

31) யோக்கட், தயிர் போன்றவற்றை வாங்கும் போது கட்டாயம் அவதானிக்க வேண்டியது?

(1) காலாவதியாகும் திகதி (2) நிறை (3) உற்பத்தித் திகதி

32) இலங்கைக்கு கிழக்கே காணப்படும் நாடு எது?

(1) அமெரிக்கா (2) இந்தியா (3) தாய்லாந்து

33) 

படத்தில் காட்டப்பட்டுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது?

(1) முன்னால் சிறுவர் கடவை

(2) முன்னால் பாதசாரிக் கடவை

(3) பாதசாரிக் கடவை

34) மரம் வெட்டுவதற்கு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு செல்ல வேண்டிய நிறுவனம்

(1) பிரதேச சபை (2) பிரதேச செயலகம் (3) நகர சபை

35) தாவர இலைகளை உண்ணும் பிராணிகள்

(1) நத்தை , மயிர்கொட்டி (2) அணில் , புறா (3) மாடு , கிளி

36) உணவுப்பொதிகளில் காணப்படும் இக் குறியீடு உணர்த்துவது

(1) இலங்கை தரச்சான்று (2) மாவட்டதரச்சான்று

(3) சர்வதேச தரச்சான்று

37) உடன் உணவுகள் , அதிக மிளகாய் எண்ணெய் அடங்கிய உணவுகளை உண்பதால் ஏற்படக்கூடிய நோய்

(1) இரப்பையழற்சி (2) சின்னமுத்து (3) நீரிழிவு

38) ஆபத்து ஏற்படுவதற்கு அதிக சாத்தியமுள்ள சந்தர்ப்பம்

(1) மின்னல் தாக்கத்தின் போது வீட்டினுள்ளே பலகை கட்டிலில் இருத்தல்

(2) விளையாட்டுப்போட்டி முடிந்தவுடன் பட்டாசு கொளுத்தல

(3) இறப்பர் காலணி அணிந்து கொண்டு மின் ஆழியை அழுத்துதல்

39) அருகில் தரப்பட்ட உபகரணத்தின் பெயர்



(1) பூ அலங்காரம் (2) தையல் ஊசி தாங்கி (3) தலையணை

40) கீழேயுள்ள கண்ணாடிக் குவளையில் பனிக்கட்டியை இடும்போது நிகழ்பவை முறையே



(1) பனிக்கட்டி தாழும், நீர் குளிர்ச்சியடையும், குவளையின் வெளிப்புறத்தில் நீர் தோன்றும்,பனிக்கட்டி உருகும்

(2) பனிக்கட்டி நீரில் தாழ்ந்து மிதக்கும், நீர் குளிர்ச்சியடையும், குவளையின் வெளிப்புறத்தில் நீர் தோன்றும், பனிக்கட்டி உருகும்

(3) பனிக்கட்டி மிதந்து தாழும், நீர் குளிர்ச்சியடையும், குவளையின் வெளிப்புறத்தில் நீர் தோன்றும், பனிக்கட்டி உருகும்

41) பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலம் அல்லாதது

(1) குறைந்த செலவில் பயணிக்கலாம்.

(2) குறித்த நேரத்தில் பயணிக்க முடியாது.

(3) குறித்த நேரத்தில் பயணிக்கலாம்.

42) சூழல் நேயப் போக்குவரத்து சாதனம்

(1) மோட்டார் கார் (2) மிதிவண்டி (3) விமானம்

43) நிறக் கடதாசிகளைக் கிழித்து ஒட்டுவதன் மூலம் செய்யப்படும் ஆக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) அல்ப்பனா (2) ஓரிகாமி (3) கொலாஜ்

44) வவுனியாவில் வசிக்கும் நவசாமந்தி என்பவர் கொழும்பில் வேலை செய்யும் தனது தந்தைக்கு புத்தாண்டு வாழ்த்து மடல் ஒன்றை அனுப்புவதற்காக தபாலகம் சென்று எந் நிறப்பெட்டியில் போட்டிருப்பார்?

(1) சிவப்பு (2) பச்சை (3) நீலம்

45) கட்புல செவிப்புல சாதனங்களாக கருதக்கூடியவை

(1) வானொலி, கணினி (2) தொலைக்காட்சி, திறன்பேசி (3) மடிக்கணினி, ஒலிபெருக்கி

46) பாரத தேசத்தில் பிறந்திருப்பாரானால் அவர் தெய்வம் போன்று போற்றப்பட்டிருப்பார் எனும் கூற்று யாரை சிறப்பித்துக் கூறப்பட்டதாகும்?

(1) கலாநிதி.ரீ.பி.ஜாயா (2) C.W.W. கன்னங்கரா (3) ஆதர்.சி.கிளார்க

47) தேசியக்கொடியில் உள்ள சிவப்பு நிற பின்னணி குறித்து நிற்பது?

(1) தேசத்தின் மகத்துவம் (2) நாட்டில் உள்ள இனத்தவர் (3) சிங்கள மக்கள்

48) இலங்கையின் தேசிய இலட்சினையில் உள்ள சூரியன்,சந்திரன் ஆகிய அடையாளங்கள் உணர்த்துவது?

(1) தூய்மை (2) நிலைத்திருத்தல் (3) சௌபாக்கியம்

49) எமது உடல் ஆரோக்கியத்திற்காகச் செய்யவேண்டிய செயற்பாடுகளில் ஒன்று

(1) நித்திரை செய்தல் (2) உடற்பயிற்சி செய்தல் (3) அதிகமாக உண்ணுதல்

50) இரத்தினக்கல் அகழ்வோர் பயன்படுத்தும் உபகரணங்கள்

(1) இல்லங்கூறு , சுத்தியல் (2) பிக்கான் , மணியாசு (3) மண்வெட்டி , நாம்புவ

51) சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவது?

(1) மார்ச் 8 (2) மார்ச் 23 (3) பெப்ரவரி 4

52) உலக மரபுரிமை பெற்ற பொற்கோவில் அமைந்துள்ள இடம்?

(1) பொலநறுவை (2) சீகிரியா (3) தம்புள்ள

53) கடதாசிக்கழிவுகளை இடவேண்டிய குப்பைக்கூடையின் நிறம் யாது?




(1) (2) (3)

54) உடல் வளர்ச்சிக்கு உதவும் போசணைக்கூறு?

(1) கனியுப்பு (2) கொழுப்பு (3) புரதம்

55) புதுவருட காலத்தில் கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் கலாசாரப் பழக்கமுடையவர்கள்.

(1) தமிழர்கள் (2) முஸ்லிம்கள் (3) சிங்களவர்கள்

56) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படி நிலையைக் காட்டும் உரு எது?

(1)



(2)



(3)



57) பச்சை நிறச்சாயத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கலக்கப்பட வேண்டிய இரு நிறச் சாயங்களும் எவை?

(1) நீலம்,மஞ்சள் (2) மஞ்சள்,சிவப்பு (3) நீலம்,சிவப்பு

58) உணவை நீண்டகாலம் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் பாரம் பரிய முறைகளுள் அடங்காத ஒன்று?

(1) அவித்து வைத்தல் (2) தகரத்தில் அடைத்தல் (3) தேனில் இட்டு வைத்தல்

59) தொற்றாத நோய்களுக்குள் அடங்குவது?

(1) உயர்குருதி அமுக்கம் (2) சின்னமுத்து (3) கொப்பளிப்பான்

60) “மண் அடுப்பின் பயன்கள்” எனுந் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக? ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக அமைந்திருப்பதுடன் எழுத்துக்கூட்டலும் சரியாக அமையப் பெறுதல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

1) ..............................................................................................................................

..............................................................................................................................

2) ..............................................................................................................................

..............................................................................................................................

3) ..............................................................................................................................

..............................................................................................................................

LMDUnit